ISSUE NO 05

டிசம்பர் 2023

# Cyber Guardian

Publication for your online safety

SRI LANKA CERT|CC
Sri Lanka Computer Emergency Rediness Team
Coordination Centre

2023 ஆம் ஆண்டில் சைபர் பாதுகாப்பு குறித்த பின் தொடர்தல்

## 3000 பேருக்கு சைபர் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி



2023 ஆம் ஆண்டில், இலங்கை CERT நிறுவகம் இணையப் பாதுகாப்பு தொடர்பில் 3 ஆயிரம் பேருக்கு பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அரசாங்கத்துறையில் பல்வேறு தரங்களிலுள்ள தகவல் தொழில்நுட்ப அதிகாரிகள், தொழில்நுட்ப கற்கை நெறிக்கு பொறுப்பான ஆசிரியர்கள், ஊடக கல்விமான்கள் மற்றும் தனியார் துறை தகவல் தொழில்நுட்ப அதிகாரிகள் ஆகியோர் இந்த குழுக்களில் இடம்பெற்றிருந்தனர். இதற்கு மேலதிகமாக, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக பீடங்களைச் சார்ந்தோரும் இணைய பாதுகாப்பு குறித்து கணிசமான அறிவைப் பெற்றுக்கொண்டனர். இந்தப் பயிற்சி செயல் அமர்வுகள் தேசிய சைபர் பாதுகாப்புக் கொள்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டன. இந்த நிறுவகம் இணைய பாதுகாப்பு கொள்கைகளை உள்ளடக்கியவகையில், இடையூறு முகாமைத்துவம் இணையப் பாதுகாப்பிற்கான உடனடி முறைகள், இணையப் பாதுகாப்பு குறித்த தற்போதைய சட்டவிதிகள், தரவுப் பாதுகாப்பு மற்றும் கணினி பயன்பாடுகளுடன் தொடர்புடைய பாதுகாப்பு மற்றும் வலை அமைப்புக்கள் விடயங்களை உள்ளடக்கி 34 செயல் அமர்வுகளை நடத்தியுள்ளது.

விசேடமாக, அரசாங்க நிறுவனங்களின் தகவல் பாதுகாப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளை இலக்காகக்கொண்டு இந்த செயல் அமர்வுகள் நடத்தப்பட்டன. இலங்கை ஊநுசுவு நிறுவகம், தொழில்நுட்ப அமைச்சுடன் இணைந்து, அரசாங்க நிறுவனங்களில் இணையப் பாதுகாப்பை நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தும் சுற்றறிக்கையும் வெளியிட்டுள்ளது.

## இணைய பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சேவைகள்

இலங்கை CERT நிறுவகம் கடந்த வருடத்தில், அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் இணைய பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளது.

இதற்கு அமைவாக 11 இடையூறு முகாமைத்துவம் (Risk Governance and Compliance), ஆளுமை விடயங்களையும் இணக்க தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு மதிப்பாய்வுகளையும், 09 கையடக்க தொலைபேசிகள் குறித்த பரிசோதனைகளையும், 14 வலைப்பின்னல் பரிசோதனைகள் மற்றும் 23 சட்டஞ் சார்ந்த பரிசோதனைகளையும் நிறுவனம் 118 இணையதளங்கள் தொடர்பிலும் மேற்கொண்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் மூலம், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் இணையப் பாதுகாப்பை மேம்படுத்த செர்ட் நிறுவனம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.



# பிரதான திட்டங்கள்

CERT நிறுவகத்தினால், 2023 ஆண்டில்,தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல முக்கிய திட்டங்களை அடையாளம் காண முடிந்துள்ளது.

**a. தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு நிலையம் (NCSO)**
இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் பாதுகாப்பு சம்பவங்களை நிறுவனங்கள் தொடர்ந்து அடையாளம் காணும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்திற்கான, வன்பொருள் கொள்முதல் 2023 ஆண்டு இறுதியில் பெற்றது. இதற்கான நடவடிக்கை 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டில் நிறைவடையும் என்றும் எதிர்பார்க்கப்படு கிறது.

**b. தேசிய சான்றிதழ் அதிகாரசபை (NCA)**
இந்த திட்டம், டிஜிட்டல் சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுக்கு சான்றிதழ்களை வழங்கும். அதற்கான சான்றிதழ் வழங்கும் நிறுவனமாக டுயமெயியல செயற்படவுள்ளது.

**c. தேசிய தொழிற்பயிற்சி தகுதி**
தேசிய தொழிற்பயிற்சி ஆணைக்குழுவுடன் இணைந்து, இலங்கை ஊநுசுவு நிறுவகம் சைபர் பாதுகாப்பு தொழில் நுட்பத்திற்கான தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு - தேசிய தொழிற்கல்வி தகுதி (NVQ) க்கு தேவையான பாடத்திட்டத்தை உருவாக்கியுள்ளது. தற்போது ,இந்த டிப்ளோமா கற்கை நெறியில் 24 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். 2024 ஆம் ஆண்டிற்காக 50 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றுள்ளதாக நிறுவகம் தெரிவித்துள்ளது.











# தகவல் தொடர்பு







## 20,000+ இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் சமூக ஊடகங்கள் தொடர்பான சம்பவங்கள்




2023 ஆண்டில், இலங்கை CERT நிறுவகத்தில் சமூக வலைப்பின்னல் பாதுகாப்பு தொடர்பில் 20,033 சம்பவங்களும்,இணைய பாதுகாப்பு குறித்து 409 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த நிறுவகம் உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகளின் உதவியுடன் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கிள்ளது.
இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் விடுக்கப்பட்டிருந்த அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டல்களைப்போன்று போலி கணக்குகளால் ஏற்படும் விளைவுகளையும் இவை உள்ளடக்கயிருந்தன. இணைய பாதுகாப்பு தொடர்பான முறைப்பாடுகளில், இணையவழி மூலமான துன்புறுத்தல்கள் ,போலியான குற்றச் சாட்டு மற்றும் பின்தொடர்தல் மற்றும் தனிநபர்கள் அல்லது குழுக்களை குறிவைத்தல் போன்ற விடயங்களில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. குற்றவாளிகள் சமூக ஊடகங்கள், இணைய தளங்கள் அல்லது பிற இணைய அமைப்புக்களைப் பயன்படுத்தி மற்றவர்களை அச்சுறுத்துவதற்கு, அல்லது பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றனர். பெரும்பாலும், இனம், மதம், இனக்குழுத்தன்மை, பாலினம் போன்ற பண்புகளின் அடிப்படையில் தனிநபர்கள் அல்லது குழுக்களுக்கு எதிராக செய்யப்படும் குற்றங்கள் வெறுப்புக் குற்றங்களில் அடங்குகின்றன. தனிப்பட்ட தகவலுக்கான அங்கீகரிக்கப்படாத அணுகல், தரவு மீறல்கள் மற்றும் அடையாளத் திருட்டு Phishing Attack மூலமாக தரவு திருட்டு, தீங்குநிரல் திருட்டு மற்றும் அச்சுறுத்தல்கள் மற்றும் முக்கியமான தகவல்களின் அடிப்படையில் மிரட்டி பணம் பறித்தல் ஆகியவையும் இதில் அடங்கும். இணைய தளம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் போது முன்னெச்சரிக்கைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தகவலறிந்த நடத்தை ஆகியவற்றைப் பயன்படுத்தாததன் தாக்கத்தை இவை எடுத்துக்காட்டுவதாக இலங்கை CERT நிறுவகம் தெரிவித்துள்ளது. இதனால் சைபர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுடன் இந்த தளங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை இலங்கை CERT நிறுவகம் வலியுறுத்தியுள்ளது.

இணையப் பாதுகாப்பு குறித்து பொது மக்களுக்கான அறிவை மேம்படுத்துவது முக்கியமானதாகும். இந்த நடவடிக்கையின் முதற்கட்டம் கடந்த ஆகஸ்ட் மாதம் தகவல் தொடர்பாடல் ஊடாக பாரம்பரிய மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டன. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, 10 ஷருபவாஹினி நிகழ்ச்சிகளும் 07 வானொலி நிகழ்ச்சிகளும் ,09 அச்சி ஊடகக் கட்டுரைகள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களை தெளிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
ஒவ்வொரு மாதமும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 06 செய்திமடல்கள் (News-letters) வெளியிடப்படுகின்றன. 170 குறிப்பிட்ட சமூக ஊடக இடுகைகள் உருவாக்கப்பட்டு, அவை சமூக ஊடகத் தளங்கள் மூலம் பொதுமக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டன.
இணையப் பாதுகாப்பு குறித்த இந்தச் செய்திகளை பொதுமக்களுக்குப் பரப்புவதில் அனைத்து ஊடகங்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிவருகின்றன